ISSN 2320-4842

# சுப்ரபாரதி மணியன் நாவலில் சமயலறைக் கலயங்களில் பெண்களின் அவலநிலை

**திருமதி வெ. சுமதி**

பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருட்டினகிரி – 635 001.

**முனைவர் ம. லோகநாதன்**

உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை

அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருட்டினகிரி – 635 001

## முன்னுரை

தமிழ் நவீன இலக்கிய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றிருப்பவர் சுப்ரபாரதி மணியன் ஆவார். திருப்பூரில் உள்ள பனியன் கம்பெனிகளும், சாயப்பட்டறைகளும், அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளும் இந்நாவலில் இடம்பெறுகின்றது. இந்நாவலில் பூரணியும், சாந்தாவும் ஒரு நொடியில் சந்திக்கிறார்கள். இவர்கள் இருவரும் வாழ்ந்த வாழ்வும், இவர்களின் சிந்தனைகளும் பிரச்சனைகளும் எதார்த்தமாகவே சிசத்தரிக்கப் படுகின்றது. பெண், பெண்நிலை வாதம், பெண்ணியம் என்ற புதுமையை இந்நாவல் மிக எளிமையாகவே சித்தரிக்கின்றது. தொழிலும் செல்வமும் வளர வளர விபசாரமும் அந்நியமாதலும்தான் மிஞ்சும் என்பதை மிகத் தெளிவாக இந்நாவலில் பார்க்க முடிகின்றது. இவ்வாறு சமயலறைக் கலயங்கள் என்ற நாவலில் பதிவுசெய்யப்பட்டுள்ள பெண்களின் அவலநிலைக் குறித்து ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## பெண்ணியம்

பெண் தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஆணைச் சார்ந்து வாழ வேண்டிய சூழ்நிலையுள்ளது. ஆண்களை நிலை நிறுத்தும் கருத்துகளுக்கு ஆணாதிக்க வர்க்கம் பெண்களை சிறைவைத்து வருகின்றனர். சமுதாயத்தால் பெண் பின்னுக்குத் தள்ளப் படுகின்றாள். பெண்ணின் மீதான அடக்குமுறை, வன்முறை புறக்கனிப்புகளுக்கு மாறாக பெண்ணுக்கு நீதிதேடும் நிலையில் எழுந்ததுதான் பெண்ணியமாகும். பெண் பிறப்பு முதல் இறப்பு வரை எதிர்கொள்ளும் சிக்கல்கள் அதிகம். பெண் மகவுக் கொலை மறுப்பு, பெண்கல்வி, மண உரிமை முதலானவை பெண்ணியத்தில் பேசப்படும் கருத்துகளாகும். இதனால் பெண் கல்விக்குத் தடையாக உள்ளது. பணிக்குச் செல்லும் பெண்கள், வீட்டின் அனைத்துப் பணிகளையும் தானே சுமந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஆதலால் சமுதாயத்தின் சமச்சீரற்ற நிலையையும் மனித வளர்ச்சியற்றத் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது. இதுவே பெண்ணியம் ஆகும்.

## சமையலறைக் கலயங்கள் கூறும் செய்திகள்

சமையலறைக் கலயங்கள் என்ற நாவல் மிகச் சிறந்த பெண்ணிய நாவல். 21ஆம் நூற்றாண்டில் உலகமயமாக்கலும், தனியார் மயமாக்கலும், தாராள மயமாக்கமாய் நுழைந்து பல்வேறு நன்மைகளையும், தீமைகளையும் செய்து கொண்டிருக்கின்றது. இந்த ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் பெண்களைப் பாதித்து வருகின்றது. நாலாயிரம் ஆண்டுகாலமாக அடிமைத்தனத்துடன் வாழும் பெண் தந்தை வழி சமூகத்தின் அத்தனைக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு வலிமையும் பெற்று வாழுகின்றாள். பனியன் தொழிலில் கொடிக்கட்டிப் பறக்கும் திருப்பூர் தெருபக்கம் பணத்தை வைத்திருந்தாலும், மறு பக்கம் சாயக்கழிவின் மோசமான நிலைகளும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. பனியன் தொழிற்சாலையில் பெண்களின் மீது திணிக்கப்படுவது பாலியல் தூண்டல், சொற்களால்

அவமானப்படுத்துதல், பெண்களின் வறுமையைப் பயன்படுத்தி அவர்களை அடையச் செய்தல், குறைவான கூலியைக் கொடுத்தல், தேவையான ஓய்வினைக் கொடுக்காமல் வேலையை வாங்குதல் போன்ற பல்வேறு கொடுமைகளும், வறுமையின் காரணமாக விபசாரத்தில் ஈடுபடும் கொடுமைகளையும் இந்நாவலில் சுட்டப்படுகின்றது. பெண்கள் அனுபவிக்கும் பல்வேறு கொடுமைகளில் மலடி என்று சொல்லி மனைவியை விட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் தன்மையும் காட்டப்படுகின்றது. இதன் குறியீடாக சாந்தா இருந்து வருகின்றாள். சாந்தாவும் சரி, பூரணியும் சரி குடும்ப வாழ்க்கைக்காக ஏங்குவதாக எந்த இடத்திலும் சொல்லவில்லை.

**“நிக்கறதுக்கு ஒரு எடம் சாயறதுக்கு ஒரு சுவர்ன்னு இல்லாம வாழ்க்கை ஓடிட்டிருக்குது சாந்தா”[1]**

சாந்தாவிற்கச் சாய்ந்துகொள்ள ஒரு சுவர், குட்டிச்சுவராக இருந்தாலும் போதும் என்று நினைக்கிறாள். அதற்காக அவள் ஏங்குவதும், மன அழுத்தமும் காட்டப்படவில்லை. சாந்தா கணவன் சடகோபன் மற்றும் அனைவரையும் எண்ணிப் பார்க்கும் போது அவள் சிரித்துகொள்கிறாள். அந்தச் சிரிப்பில் அனைவரும் கரைந்து போகின்றார்கள். அதே சமயம் இலட்சியவாதியாகவோ, கொள்கைப் பிடிப்புள்ள பெண்ணாகவோ சாந்தாவை காட்டவில்லை. அந்தந்தக் காலகட்டத்தில் உண்மையான வாழ்வை விரும்பிய பெண்ணாகவே இருக்கின்றாள்.

## சமூகத்தில் பெண்களின் நிலை

தாய்வழி சமூகத்தில் உன்னதமான தலைமைப் பொறுப்பில் இருந்த பெண் நிலவுடமையைச் சமூகத்தில் தந்தை வழி சமூகத்தில் அடிமைநிலைக்கு பெண் தள்ளப் படுகின்றாள். நிலவுடமைச் சமூதாயத்தில் முதல் நிலையில் பெண் பாலியல் சுதந்திரம் படைத்தவளாக இருக்கின்றாள் எனப் பல சமூகவியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நிலவுடமைச் சமூகம் இன்று நிலவத் தொடங்கிய பின்னர் தன் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தன்னுடைய சொத்துக்கள் போய் சேரவேண்டும் என்ற ஆணின் சுயநலம் தோன்றிய பின் பெண்ணின் மீது பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் படுகின்றது. கற்பு முதலிய கோட்பாடுகளும், திணிப்புகளும் இக்கால கட்டத்திலேயே தோன்றியிருக்க வேண்டும்.

**“பெண் அடிமைத்தனம் பெண்மேலான பொருளாதார ஆதிக்கத்தில் இருந்தே எழுகின்றது. மனித வரலாற்றிலும் கடந்தக் காலச் செய்தியும் கூறியுள்ளது”[2]**

பூரணி என்னும் பாத்திரப் படைப்பின் மூலம் வரலாற்றில் பெண்ணின் கடந்தக் காலக் கொடிய துன்பங்கள் காட்டப் படுகின்றது.

## பெண்கள் பற்றி கூறும் செய்திகள்

**“பெண் தொழிலாளர்கள் பாலியல் குறித்த தங்களின் அடையாளங்களைச் சரியாக வெளிக்காட்ட முடியாதபடி இருக்கிறதைத் தான் சுட்டிக் காட்டியிருந்தோம்”[3]**

பெண்ணியம் குறித்து ஆழமாக அறிந்து கொள்ள முடியாத சாதாரண வாசகர்களுக்கும் பெண்கள் பற்றிய தகவல்கள் போய்ச் சேருவதற்கு நாவல் என்னும் இந்த வடிவத்தைப் பயன்படுத்திகொள்ள தோன்றுகின்றது. சமூதாயத்திற்குத் தேவைப்படும் ஒரு படைப்பாளி கருதும் செய்தியைத் தனது படைப்பில் கூறுவதற்குப் படைப்பாளிக்கு முழு உரிமையும் இருக்கின்றது.

**“மார்ச் 8, சர்வதேசப் பெண்கள் தினம் தனது 99வது வருடத்தை நிறைவு செய்து கொண்டு போயிற்று”[4]**

சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி ஒரு பத்திரிகைச் செய்தியைப் பூரணி படிப்பதாகப் பல்வேறு செய்திகள் வாசகனுக்குத் தரப்படுகின்றது. பெண்னின் விடுதலையில் தான், ஆணின் விடுதலையும் அடங்கியுள்ளது என்பதைப் பார்க்க முடிகின்றது. பூரணி படிக்கும் கட்டுரைகள் நீண்டதாகவும், ஆய்வு நோக்கிலும் அதில் ஒரு சராசரி வாசகனுக்குச் சோசலிசம் போன்ற தகவல்கள் மீண்டும் மீண்டும் போய்ச் சேர வெண்டும் என்று சுப்ரபாரதி மணியனின் அக்கறையில் தான் பார்க்க முடிகின்றது. ஆசிரியரின் எளிமையான நடையையும், வாசிப்பையும் எளிமையாக்குகின்றது. சோபனாவுக்கு பனியன் கம்பெனியில் வேலை அதிகரித்தாலும் அதற்குட்பட்டு நடக்கும் சோபனாவை காட்டித்தரவில்லை. ஆசைப்பட்டாலும் கூடத் திருமணம் செய்துகொள்ளமுடியாத சோபனா போன்றவர்களும் வசதி குறைவால் முடிகின்றது. வாடுகின்ற நிலையை பார்க்கமுடிகின்றது.

வாசகனுக்குத் தகவல்கள் மீண்டும் மீண்டும் போய் சேரவேண்டும் என்ற அக்கறையைத் தான் காணமுடிகின்றது. ஆசிரியரின் எளிய படைப்பு போன்ற இடங்களில் வாசிப்பையும் எளிமையாக்குகின்றது.

பனியன் கம்பெனிகளிலும் கூட இந்த சாதாரண வேலையிலும் சூபர்வைசர், முதலாளி என்று பலபேருடன் வேலை செய்ய வேண்டிய நிலையில்தான் பெண்கள் இருக்கின்றார்கள். புதியதாக வேலைக்குச் செல்லும் பெண்களின் உழைப்பு முழுவதுமாகச் சுரண்டப்படுகின்றது. வேலையைக் கற்றுக் கொள்வது என்ற நிலையில் ஒரு வாரச் சம்பளம் தராமல் ஏமாற்றப்படுகின்றார்கள். அதிகமான பணம் இருந்தாலும், உழைக்கும் தொழிலாளிகளுக்குச் செலவு செய்ய முதலாளிகளுக்கு மனம் வருவதில்லை என்பதை இந்நாவலில் சுட்டப்படுகின்றது. பெண் தொழிலாளர்கள் பாலியல் குறித்த தங்களின் அடையாளங்களைச் சரியாக வெளிக்காட்ட முடியாதபடி பூரணி இருக்கின்றாள். பாதிக்கப்பட்ட பெண்கள் சமூகத்தின் இழிந்தப்பார்வைக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள். பெண்கள் முதலில் தங்கள் பலத்தை முழுமையாக உணர்வதும் அதற்கான விழிப்புணர்வையும் பெறவேண்டும். அதில் பெண் சமூகத்தில் படிமமாகப் பூரணியைப் பார்க்க முடிகின்றது. பணி புரியும் இடங்களில் கூட முதலில் நீங்கள் பெண்கள், பின்னர் உழைப்பாளிகள் என்ற நிலை இருப்பதை பூரணி சுட்டிக்காட்டுகின்றாள். பூரணி ஒரு சராசரி சமூகத்தில் தமிழ்ப் பெண்ணாக மாறி விடுகின்றாள்.

**“இயற்கையில் ஆண், பெண் வேறுபாடு இருக்கிறது. நடைமுறையில் அவர்களை வேறுபடுத்திச் சமமாக நடத்தலாம். பெண்கள் ஆண்களை வெறுக்கத் தேவையில்லை”.[5]**

பூரணி குடும்ப அமைப்பு உளவியல் ரீதியில் இருப்பது பாதுகாப்பான நம்பிக்கையைத் தருகின்றது.

## அரசு நிறுவத்தை தனியார் மயமாக்கல்

தனியார் மயம் என்ற பெயரில் அரசு நிறுவனங்கள் கூடச் சிறிது சிறிதாகத் தனியார் மயமாக்கப்படும் நிலையில் ஊழியர்களும், தொழிலாளிகளும் சுரண்டலுக்கு ஆளாக நேரிடும் என்பதை நாவலின் மூலம் உணர முடிகின்றது. பெண்களுக்கான இதழ்களிலும் தரமான தலைப்புகளும் அட்டைப் படங்களும் பெண்ணுரிமை தரப்படுகின்றது. சமையலறை, படுக்கையறை தாண்டி இன்னும் பத்திரிக்கை முன்னேறவில்லை என்பதில் அனைவருக்குமான வருத்தத்தை நாவல் பகிர்ந்து கொள்கின்றது. விளம்பரங்களில் வரும் பெண்கள் உடையில் காட்டும் அலட்சியம், பூரணியைக் கவலைகொள்ள வைக்கிறது. வருங்காலப் பெண்சமூகம் பற்றி கவலைக்கொள்பவளாக இருக்கிறாள்.

## முடிவுரை

சமையலறைக் கலயங்கள் என்ற நாவலில் வரும் கதாபாத்திரமான சாந்தா ஒரு அனாதைப் பெண்ணை தத்தெடுத்து வளர்க்க நினைக்கின்றாள். இன்னும் தத்தெடுக்காத நிலையில் சுகந்தி என்ற அந்தப் பெண்ணுக்குக் கற்பனையாகப் பெயரிட்டு குடு, குடுனுவா சுகந்தி நம் வீட்டிற்குப் போகலாம் என்று சொல்லி அவளும் நடக்கின்றாள். இந்த இடத்தில் நாவலாசிரியரின் தத்தெடுக்கும் ஆலோசனை சமூக நலன் கருதி சொல்லப்பட்ட ஆலோசனையாக இருக்கிறது. பூரணி, சாந்தா என்னும் வேறு பொருளாதாரச் சூழ்நிலையில் வாழும் பெண்களின் வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளும் இந்நாவலில் அலசி ஆராயப் படுகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. சுப்ரபாரதி மணியன், சமையலறைக் கலயங்கள், ப. 75
2. மேலது., ப. 12
3. மேலது., ப. 81
4. மேலது., ப. 11
5. மேலது., ப. 41

## துணைநூற்பட்டியல்


1. சமையலறைக் கலயங்கள், சுப்ரபாரதி மணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098.

2. கார்த்திகேசு சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர் சென்னை - 98

3. இரா.மோகன், நாவல் வளர்ச்சி, மணிவாச கர் பதிப்பகம், சென்னை. பதிப்பு - 1987.

4. நா. வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098. முதற்பதிப்பு: ஆகஸ்ட் 2008.

5.எஸ். கோத்தாரி, தமிழ்நாவல்கள் ஓர் ஆய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட், அம்பத்தூர், சென்னை.